அநு பல்லவி,

கஞ்சமலர்த்தடஞ்சூழ் கச்சிநகரில்வாழும்
கருணாகடாட்சனெனயகன் கரிகிரிவரதனை-அஞ்

சரணங்கள்.

மாங்குயில்கூவுது மாருதந்தாவுது
பாங்கியேமன்மதப் பயலம்பணைமீறுது
திங்கள்சுடுகையாலென் அங்கமெல்லாநோகுது
தேமற்படர்ந்தகொங்கை வியமிமையல்மீறுது-அஞ்சு

சிந்தையிற்றுயர்மிக மிகுந்துவருகுது
சித்தசனம்பணையாற்காம லாகிரிபெருகுது
எந்தவிததிலேனுமிங் கழைத்துவருவது
ஏந்திழையேயுகைட னிசையாவிடிற்றுளாது- அஞ்சு

அச்சுதனுமெங்கள் கச்சிநகர்வாசனை
யன்பாக்கமலத் துறையுமதிநேசனை
இச்சையுள்ளோர்கள்பா விருக்குஞ்சகதிசனை
யிங்குவரச்செய்தாலுனக் கிகத்திற்செய்வேன்பூசனை-அஞ்சு

சுசு,பதம்-இ-ம்-தோடி- அடதாளம்

பல்லவி.

தெளிந்தநிலவுபகல்போலவெரிக்குதே-என்னுசைக்கண்ணாட்டியைச்-சேராமலெந்தன்மனம் பதைபதைக்குதே

அநுபல்லவி.

அளிநேர்விழிச்சிசிற்றிடைச்சி துரைச்சியெந்தன்
அருமைதெரிந்துமோசஞ் செய்தாளே-பாவி
வளருதேராப்பொழுது தோர்யுகமாகுதே
வரவரவுமேமோக மீறியிதமூறுதே- தெ

சரணங்கள்,

சித்தினியிவளென்று மெத்தவும்ப்ரமைகொண்டு
மெதுவைமீதினிற்சென்று முத்தமிட்டுக்கொண்டு
மஸ்தகமார்பினின் வளருஞ்சேர்சந்தனம்பூசி
மன்மதகேளிக்குப் பந்தயங்கள்பேசி
தத்தைமொழியினுளைக் கைத்தலத்தாலணைத்த
வித்தையைமறந்தாளோ மீண்டும்பொருந்தாளோ-தெளி

குளிர்ந்தவேளையில்வந்தே குலவிமார்போடணைந்து
கும்பஸ்தனங்குழையக் காட்டிமனமகிழ்ந்து
வளமாயெந்தனுக்குச்செங் கனிவாயிதழைத்தந்து
மையன்மிகவும்மூட்டி யல்குற்பட்டத்தைககாட்டி

துளபமணியுங்கிருஷ்ண லீலைபோற்பாட்டி
சுகந்தரவருவாளோ சீமாட்டியென்கண்ணாட்டி - தெ
சற்றேறெசெய்யுமோடி சுத்தமதாகத்தோடி
வித்தையாகப்பாடி நித்தமும்நான்கூடி
நித்திரையிலிற்கண்ட கனவாச்சேபதை
நினைக்கநினைக்கப்பெரு மூச்சாச்சே
பத்தன்சுப்பராமன் பாங்கினிலிருந்தென்றும்
முத்துமுத்தாய்க்குலாவு மொழியாளைக்காணமல்

௫௫, பதம்-இ-ம்-சாவேரி-தாளம்- ரூபகம்.

பல்லவி.

எங்கேயிருந்தாலுந்துரை-சாமிக்கென்மேற்பட்ச
மிருக்குமடியன்னமே

அநுபல்லவி.

செங்கழநீரோடைசூழுந்திருவாரூர் தனில்வாழும்
தேவாதிதேவன்வசந்த தியாகேசவனுக்கு-எங்கே

சரணங்கள்.

நானவனுக்குச்செய்த நன்றியிவ்வுலகுள்ள
நாளளவு மறக்கான்-ஒரு
நாளாகிலுமென்னை விட்டிதுவரையிலவரை
நாழிபுட்பிரிந் திருக்கான்
எஃறெவென்மேல்மோடி தானேசெய்துக்கொண்டு
மானேயிருக்கின்று மூனென்னசெய்குவேன்
எவர்களுடன்கூடி யிருந்தபோதிலும்
என்போலவனுக்குக் கிடைக்குமோபோடி-எங்கே

ஆகிநாளையிற்றலை தொட்டெனக்குச்சொன்ன
வாணைதனைகிரண்டு செய்யான்-அவனுக்
காராகிலுமென்மீது தூறுசொன்னபோதிலும்
அதைமனதினிலென்றும் வையான்
சூதுக்காரக்கள்ளி சக்காளத்தியென்மேல்
தொடுவழக்கெல்லாமோதி துரைசாமியைமயக்கச்
சொக்குப்பொடியுந்தூவித் தலையாமோகந்தந்தாளே
சுகமாகத்தானேயவள் வாழட்டுமென்கண்ணாளன்-எங்கே

எத்தேசகாலமுமச் சித்தினியுடனேகூடி
யிருந்தபோதிலுமென்னைத் துதிப்பா-ன . ளை
இணைந்தரூபத்துநான்கு கரணஞ்செய்யும்போது
மென்னைநினைந்துருகிச் சுகிப்பான்
கொத்துப்பூங்குழலாளே கோதாயேன்மலைக்குறுய்
கொள்ளையாகுமிச்சள்ளை வெள்ளையாய்நாளைத்தெரியும்
உற்றநிலவெங்நாளு மொளிகுன்றுதிருக்குமோ
வோதுஞ்சுப்பராமன்றமிழ்க் . குகந்தருளுந்தியாகேசன் (எங்)

—)§(*)§(—

௬௯, பதம்-இ-ம்-கியால்-ஆதிதாளம்.

பல்லவி.

வருவாரொன்றெண்ணினானே
வகைமோசம்போயினேனே

அநுபல்லவி.

திருவளர்தணி காசலதுரை
சிவசுப்பிரமணிய னெனுமிணைய (வரு)

சரணங்கள்,

மால்கொண்டுபுல்லி வாய்மைகள்சொல்லி
ஜாலக்காரனவன்செய்த சமர்த்தறியாமலிங்கே (வரு)
நானுனையென்றும் நழுவவிடேனென்று
தேனொழுகப்பேசியென்னைதெருக்கடக்கவிட்டவனிங்கே (வரு
அற்புதபாத னறுமுகநாதன்
சற்கனாக்கஞ்சிவார்த்துத் தழுவித்தலைதொட்டவடிவேலனிங்கே வ

———

௭௦, பதம்-இ-ம்-சாவேரி- அடதாளம்.

பல்லவி,

ஆசைமிஞ்சுதே-பெண்ணாசேயென்
யணைந்தொருமுத்தந்தாடி

அநுபல்லவி,

வேசையர்க்குள்ளே லாசக்காரிநீகல்ல
மேடையின்மேல்விளை யாடுவோமிருவரும் (ஆசை)

சரணங்கள்.

பத்தரைமாற்றுள்ள தங்கச்சரீரத்தைப்
பார்த்துப்பார்த்தென்மன துருகுதே
குத்துங்குஜமிரண்டுங் கண்டவுடனெனக்குக்
கூடவேணுமென்றுமாற் பெருகுதே
இத்தனைமோடியாமோ யேய்க்குறுய்சும்மாப்போமோ
பத்தும்பொன்னூறுபொன் தருவனடியென்னைப்
பாரடிமையல் தீரடியனமே (ஆசை)

சிதக்குளக்கரையிற் றண்ணீரிலுனைக்கண்டு
சிந்தைமிக மயங்கினேனடி
மாதாசேயுன்னைப் போலேபெண்களிந்த
மண்டலத்திலெங்குங் காணேனடி
காதலுடனுனது காலொடுகால்பிணைத்துக்
காதினுள்ளும்நுணி தாவதானிவிக்
கலந்துமன்மதலீலை செய்யவும் (ஆசை)

இடையிலுடுத்ததுகிற் காற்றிலொதுங்கும்போதுன்
னிருதுடைபசும்பொன்போற் காணுதே
வடிவுறுமஞ்சள்பூசும் வாடையதனைக்கண்டென்
மதிமயங்கியேப்ராமை பூணுதே
அடைவுடனென்னைக்கூடி யதாரசத்தைத்தாடி
நூடமதுதனிலென் னுகிர்வடுநாட்டவுங்
கொக்கோகவிதியின்படி புட்குரல்காட்டவும் (ஆசை)

௪௮, பதம்-இ-ம்-கல்யாணி-அடதாளம்.

பல்லவி,

என்னகாரியங்கண்டு-யிந்தக்குமரன்பேரில்
இச்சை வைத்தாய்மகளே

அநுபல்லவி,

லு மின்னங்குழந்தைவேலன்
டிமலையுங் குடிவாட்கைநிலையும் (என்)

சரணங்கள்,

தேடிக்காணவென்று லோடிமலைமலையாய்ச்
சென்றுதிகைக்க வேண்டும்-அவ

சேர்வையோவெளிதல்ல செய்யும்டீமரகங்கள்
செப்பவெவரா லாகும்
நாடித்திரிந்தாற்குன்றை கோடிகோடியாகவே
நாளைக்கும்விளையாட்டாய்த் தாளாலெற்றியெறிவான்
பாடுவோரொருகவி பாடினாலுங்கேளான்
பதினாயிரம்புக ழாற்றுப்படையைக்கேழ்ப்பான்(என்)

சோகமென்னடிமாதே யேகபுருஷனைத்
தாய்நினைப்புனஞ் சென்று-அ
சொலுமாயர்லோட்டமின்றவழியாப்பெண்ணையேமாத்தித
தூக்கிக்கொண்டானே ய று
ஆகையாற்கேளடியே யவன்றந்தையோகாபாலி
யதிலும்பிச்சாண்டி வன்னையோமுழுநீலி
வாகைசேர்பத்திரகாளி வாய்த்தமாமன்சோலி
வையகருத்திரதார னையோபண்ணுவாரோகேலி(என்)

௪௬, இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்

பல்லவி,

கண்மணியேயென்சாமியின்னம்வரக்காணேனடி
கனவிலுமறவேனடிமானே *

அநுபல்லவி.

மன்னனெனங்களுனமைபாலன் மாதவர்கட்கனுகூலன்
மைந்தன்சபாபதிமால்தரு சந்த்ரனையழைத்துவாபோடி கண்

சரணங்கள்.

எத்தனைமோடியென் சாமிசெய்யும்வித்தைக ளென்னென்றுசொல்
வேன்-சித்தசன்வந்துமெத்தவுமென்னை யெத்துரானடி
மெத்தையிற்படுத்தாலுமென்கண்ணித்திரையோவருவதில்லை[கண்
குத்துங்குஜங்கள்விம்மிமனது குழையுதேயிதற்கென்னசெய்வேன்
பண்டுபழகியிருந்தசாமி யென்றைக்கவனொன்னண்டையில்வருவார்
கண்டுக்கொண்டாற்கலக்கந்திருங் காமினானடி
தென்றற்காற்றும்வீசுதடி திகழ்துடைரெண்டுந்துடிக்குதடி[டி(க)
இந்தவேளையிலெந்தன்சாமியையெவ்வகையேனுமழைத்துவாபோ
இந்தவிரகவேதனைமானேநா னெந்தவிதத்திற்சகிப்பேன்
அந்தரங்கமியாவுமறிந்தபுருஷ னழகுதுரையடி

சுந்தரமீனாட்சியினது   தூய்தனப்பாலுண்டவன்றனை
இந்தக்ஷணத்தில்வணங்கிச்சபாசந்த்ரனையழைத்திங்கேவாபோடி-௧

௫௭, பதம்-இ-ம்-பியாகடை-ரூபகதாளம்,

பல்லவி.

எங்கேயாகிலுமவன்-சுகித்தாலதுபோதும்
யேண்டிநீதூற்றுகிறாய்

அநுபல்லவி.

கங்கையைத்திங்களைக்   கதிர்சடையணியீசன்
காலைத்தூக்கிநின்றே   யாடுஞ்சிதம்பரேசன்(எங்)

சரணங்கள்,

பெண்ணென்றியான்பிறந்த   பிழையுற்றிருப்பதாலே
பேச்சாலாவதென்னடி   யினிமேலே
என்னென்றவர்சொலினவ் .   விசைவார்த்தைபுவிமேலே
யெல்லாஞ்சரியென்   றெண்ணங்கொண்டதினாலே(எங்)
வருத்தப்படுவதினால்   வருவதென்னடிமுன்னம்
அவர்கத்தியதெல்லாம்போய்   நானத்தினாலோசின்னம்
பொறுத்தார்தமக்கோர்நானும்   புவிமேல்வராதுபின்னம்
போமோவென்னாசைமீ   றாமோவழியேமுன்னம்(எங்)
மருவுமல்லிகையிரு   வாட்சிசண்பகஞ்சூடி
மையலாகிரியினால்   வாழ்த்தியென்னைக்கொண்டாடி
இரவும்பகலுமென்னைப்   பிரியாமலேகூடி
யிருந்தபுண்ணியன்றன்னை   யென்னசொல்லுவேன்போடி(எங்)
அநுதினமுமவரை   யணைவதற்குநானே
யாசையுற்றேவெகு   நேசமாதாகினேனே
மனதிற்றயவிருந்தால்   வருவாரடிமானே
மானமில்லாதவர்மேல்   மையல்கொண்டவர்தானே(எங்)

௫௮,பதம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்;

பல்லவி.

மானேமயிலேகுயில்கண்மணியே-என் மன்னனைக்காணாயோ
மானேமயிலேகுயில்கண்மணியே

அநுபல்லவி,

தேனேயெங்கள்ந   டனபதிஸ்ரீபதி
திகழுஞ்சபாபதிசந்திரனைத்   தேடிவாடி-மானே

சரணங்கள்,

கன்னிவயதிலென்னைக்கைபிடித்தாரடிமானே-அடியேதேனே
கலந்துசுகக்கலவி செய்தாரடிகோடி
மன்னனுக்கெவளோ மோசஞ்செய்து
மருந்திட்டவகையை நானறிவேனடி
மனதுகலங்கிதுரை மதன்மலர்ப்பசுழியால்
மயங்கித்திரிகிருரோ வறியேனடி-மானே
மதியுமுதித்ததிப்போமனதுகலங்கித்துரைமானே - அடியேதேனே
மதன்கணையோசர மாரிதொடுக்கின்றனே
மன்னனில்லாதயிவ் வேளையிலேநான்
மனமகிழ்ந்திருப்பது மழகோடி
மதியனல்தாவுது விதிவசமோபெண்ணே
வஞ்சியான்முன்செய்த பூசாபலன்ருனே-மானே

ருஉ, பதம்-இ-ம்- பியாகடை- அட்தாளம்

பல்லவி.

ஆருக்காகிலும்பயமா-சும்மாசொல்லட்டு
மதிலென்னரகசியமா

அநுபல்லவி,

போருக்குவிஜையனென் மோடிலிங்கதுரை
போகங்கிடைத்ததெந்தன் யோகமல்லவோபெண்ணே ஆரு

சரணங்கள்,

நானேசம்மதித்தால் மற்றவர்க்கென்னநஷ்டி
ராஜாங்கமறிந்தவற் கார்சொல்லுவாரட்டி
மானேமதயானைமே லேறியுந்திட்டி
வாசனுழைய வேணுமோபளாகெட்டி ஆரு

மனதுக்கிசைந்தமண வாளனைச்சேர்ந்ததாலென்
வாய்மதங்கொண்டுபேசும் வம்பர்களுநாக்குஞ்சொன்
தனதாயெடுத்துக்கொள்வோர் சர்வசண்டாளமாம்புன்
சார்புடையோரெனக்கென் சாமிவந்தாற்கோடிபொன் ஆரு

நான்பிடித்ததுவென்ன முருங்கைக்கொம்புபிடியா
நடத்தைதெரிந்தவருக் கொருவர்சொன்னபடியா
மான்போல்விழிபாற்கெல்லா மிதுதானென்னநொடியா
வஞ்சியாளிதற்கெல்லா மஞ்சினகுடியா ஆரு

—— + ——

௫௩, பதம்-இ-ம்-கியால்-ஆதிதாளம்.

பல்லவி,

என்னிடநடத்தைக்குந்தேவரீர்மோடிக்கு
மெந்தவிதஞ்சேருஞ்சுவாமி

அநுபல்லவி.

கன்னற்செழிக்கும்வேளூர் முத்துக்குமாரசாமி
இன்னமென்னபேச்சுன னெண்ணம்வேறதாச்சு-என்

சரணங்கள்,

ஆகியிற்சொன்னதெல்லாம் வெட்டவெளிச்சமாச்சு
அடியாளசெய்ததுவாற்றிற் களைத்தபுளிபோற்போச்சு
சூதுக்காரியவள்தூற் போதனைமிகவாச்சு
சொந்தமெனநம்புமென் னதிர்ஷ்டமிப்படியாச்சு என்
தேடியழைத்தபோதே யும்மிடமிகுநேசம்
தெரிந்ததுநீர்செய்த தெல்லாமுழுமோசம்
வேடிக்கைச்சொற்களை வினையமாக்குறீர்நாசம்
வேறேயானதினாலே வருகுதேமிகுரோஷம் என்
மலைக்கசக்கிமுகர்ந் ததினாலுண்டோபாபம்
மனமுமனமுமொத்து மருவினாலுண்டோகோபம்
குலதெய்வமாய்சுப்ப ராமனனுதினமுங்
கொண்டாடுஞ்சேவலங் கொடிக்குமராசிறியாள் என்

௫௪, பதம்-இ-ம்-சாவேரி-மிசுரதாளம்.

பல்லவி.

கணவன்வந்தழைக்குமுன்போய்வருகிறேன்பட்சங்
கருத்திலிருக்கவேணும்

அநுபல்லவி

மணிமேருவனையதிண் புயனேசண்முகவேலா
வாலிபந்தனிலென்னைத் தாலிகட்டினசொந்தக்-கணவ

சரணங்கள்.

அடிக்கடிபுகல் சொல்லியனுப்பின
லநுமானத்துக்கிடந் தோணுமே
எப்படிக்குநா மிருந்தாலுமுருகருக்
பால்குடித்திட வேணுமே
கடத்தினாலுமவன் விட்டுப்போவதில்லை
கசக்கிமோர்வதினால் ரசக்கிமொன்றுமில்லை
அடுத்தவீட்டுக்காரி யறிந்தாலுமிகுதொல்லை
ஐயனேயென்மன தாரவஞ்சனையில்லை- கணவ

கொண்டவன்தூற்றினாற் கூரையுந்தூற்றுமென்று
கூறும்பழமொழியென்ன பொய்யோ
துண்டரீகனிச்செய்தி யறிந்தாலெளிதில்விடான்
சுவாமிசித்தமென் பாசகியமையா
குண்டுணியானவற்குக் கொள்ளிவாயிருக்காது
குலத்துக்கிழுக்காஞ்சொற்கள் கூர்வாரதுகூடாது
பெண்டுகள்கணவன்சொற் பிசகிமீறப்படாது
பிடித்ததேபிடிவாதமா யோதுவததகாது-கணவ

பங்கயமலர்போல வெங்கிருந்தாலுமுன்
பதத்திலெனதுசிந்தை யிருக்கும்
துங்கமுறுங்கடப்ப மலர்மார்பாவுபசாரச்
சொல்லல்லவிதுதெரிந் திருக்கும்
சங்கையிருந்தாலேனோ வெளியாக்கிப்பொறுத்துக்கும்
சுவாமியெந்தனடத்தை தெரியுமுன்கருத்துக்கும்
பங்குனிதிருநாட்கு வருகிறேன்பொறுத்துக்கும்
பத்தன்சுப்பராமனபாட்டுக் கருள்வோய்பசித்திருக்கும்-க

==(*)==

௫௫, பதம்-இ-ம்-புன்னாகவராளி-தாளம்-மிஸ்ரம்

பல்லவி.

வந்தகாரியமேதையா-தேவரீரிங்கே
வந்தகாரியமேதையா

அநுபல்லவி.

வந்தகாரியமேது வகைமோசமாயிப்போது
கொந்தளமணிமார்பா குருகோபாலரிங்கே-வந்த

சரணங்கள்,

பாவசமுமக்கங்கே பட்சமில்லாதிங்கே
வாவரமோகமங்கே மாயங்காட்டுரீரிங்கே
ஸ்திரமானதுமங்கே தெண்டிக்கத்தேவரிங்கே
குருபூசையுமங்கே குருவேகோபாலரிங்கே-வந்த

பூசுங்களபமங்கே பொய்வார்த்தைசொல்வதிங்கே
காசும்பணமுமங்கே கபடங்காட்டுரீரிங்கே
கூசாமற்போவதங்கே கோணிக்கொள்வதிங்கே
வாசமுமக்கங்கே மருவுங்கோபாலரிங்கே-வந்த

என்னேரமுமங்கே யிந்திரஜாலமுமிங்கே
முந்திசினேகமுமங்கே மோடிகாட்டுரீரிங்கே
சந்தோஷமுமக்கங்கே சலிப்புட்ஞசையிங்கே
விந்தைக்கலவியங்கே விசயகோபாலரிங்கே-வந்த

===—==

ருகூ-பதம்-இ-ம்-அடாணு-ஆதிதாளம்,

பல்லவி.

சிறுக்கிமயக்கந்தலைக் சேறியேயிங்குவந்து
தில்லும்பில்லும்பேசுரானென்னடி

அநுபல்லவி.

விருப்பமவள்மீதினிலே ரொம்பயிருக்குது
வெறிகொண்டவன்போலவே மனதுசஞ்சலிக்குது
வெறுப்புமேலாசைகொண்டு பசப்புமுனிங்கேவந்து
வெற்றிவேலணியுஞ்சீலன் முத்துக்குமரேசலோலன் சிறு

சரணங்கள்.

குத்துணிரவிக்கைக்குட் புடைத்திருப்பதுபோல
வைத்திருக்குஞ்சூதுகளை யித்தகையென்றறியாமல்
உற்றுஉற்றேயவளைப் பார்க்கிறுனதனைக்கேட்டால்

வித்தையேதோபடிக்குரு னுத்தமபுனிதனெந்தன்
மூத்தத்தைக்கெடுக்கச்சக் களத்தியானதாலெனக்கு
மூத்துதோகோபமாரும லுற்றதிவனுஞ்சொல்லாமல்(சிறு)

சேலைப்பகட்டுக்காரி வாலைப்பருவம்போலே
கோலஞ்செய்துக்கொண்டுநல்லமாலைப்போதிலேமயக்க
சாலைவாயலிலேநின் றுலவுவதையிவன்கண்டு
சாலஞ்செய்கிருனேமெத்த லீலைதெரிந்தவளென்றே
நாளைத்தெரியுமிதெல்லாம் நாலுபேர்நகைக்கவேநான்
கேலிக்கிடமானேனடி யேலக்குழலியேயந்த(சிறு)

கொக்கோகம்பார்த்தவள்போலச்-சொக்குருனவளைக்கண்டு
சக்களத்தியவட்கல்கு லொக்கவொண்டுமிருக்குதோ
தக்கவர்தமைமயக்கச் சொக்குப்பொடியிருக்குதோ
பக்குவகாலத்திலெந்தன் துக்கத்தைக்கட்டிக்கொண்டாளே
அக்கரவணிந்தோன்சேயி தறியாதென்னவிந்தை
எக்காலமுஞ்சுப்பராம னிசைக்குகந்தருள்வேலன்(சிறு)

ருஎ, பதம்-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி,

ஆக்கப்பொறுத்தநீ ராறப்பொறுப்பதற்
கவசரப்படலாமோ

அநுபல்லவி,

பாக்யவதிபகவதிதரும் பாலா
பன்னிருபுயத்தினிலுயர்வடி வேலா
ஜாக்ரதையாகநான்சொன்ன யிடத்தினில்வாராமல்
சமயந்தப்பிவந்தென்னைவாது செய்குருய்முன்பின்பாராமல்(ஆக்)

சரணங்கள்.

கரும்புதின்னவுங்கூலி வேணுமோநல்லாய்-மனங்
கனிந்தாலுண்டோ வேலியுஞ்சொல்லாய்
அரும்புங்குழைந்தையது அழுகுரற்கேட்டு
அங்கேயிருந்தாலும்நா னதற்குப்பாலைக்கொடுப்பேன்
திரும்பவும்வருகிறேன் பாருமிந்தப்பேச்சைத்தான்
திகைத்துத்திகைத்துஏதோ விடுகிருய்பெருமூச்சை

அரும்பாவியானாலுங் கார்க்கவைத்தொருவனை
யடக்கத்திருப்பாளோ வந்தசேதியறியீரோ (ஆ)

உன்னைவிடநானதிக காமி-உனக்கு
முன்னெனக்குப்பதைக்குதே சாமி
இன்னேரமென்செய்தாயென்றுதுஜங்தொடுப்பாளேமாமி
யிழிவுசொல்லுமேயிந்த பூமி
கனனல்வில்லிசெய்யும்வேதை பகவானுக்கேதெரியும்
காமினென்றேயுமது கருத்தேமிகவறியும்
கன்னிசக்களத்தியென்னை யெங்குந்தூற்றிவிடுவாளே
கணவனுக்கில்லாதுசொல்லிக் கற்பித்துத்துரத்துவாளே (ஆ)

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டென்று-சொல்லி
யவனியோர்சொலும்வார்த்தை யதையறிந்தேனேயின்று
சாற்றிலேவேண்டாங் தெளிவிலேயிறுவென்ற
சங்கதிபோற்பேசுகிறாய் வீணாய்
நாற்றந்தோணுமோமூடிப் பார்த்தால்நாலுபேருக்கும்
நாயகாவதுதப்பித்துக் கொள்வதுஅபிப்ராயமசை
போற்றிச்சுப்பராமன்பாடும் புண்ணியசுப்பிரமண்ணியனே
பொல்லாளானாலுமாகிறேன்போகும்வேளையாகுதிப்போ (ஆ)

௫௮, பதம்-இ-ம்-அடாணா-அட்தாளம்.

பல்லவி.

எனக்கென்றுஎங்கிருந்து-வந்தாளோசக்களத்தி
என்செய்வேனடிசகியே

அநுபல்லவி.

தனக்கேயில்லாமல்மானஞ் சன்னதங்கொண்டுபேசும்
சத்திவடிவேலனையித் ததியிற்கைசோரவிட்ட (என)

சரணங்கள்.

ஆதிநாளையிலெந்த னன்னைசொல்லியதெல்லாம்
அலட்சியமாயெண்ணிப்பரிந் தேனே
சூதுக்காரனிவனென் றறிந்தாலிணங்குவேனோ
தோகையேபெண்புத்தி பின்புத்தியென்பதுபோல் (என)

மால்வாழும்பதியதி லிருந்தகும்பத்தனத்தை
வயங்குமுங்கியில்விழச் செய்தானே
தோல்போலெனையாக்கியே சூதுக்கள்ளியவளை
தொடுத்தேயென்மேற்பட்சம் விடுத்தானேயடிமானே (என)

அருங்குழந்தையவட்கொன் றுச்சேகம்மானேயென்று
அகத்தினினையானே வயில்வேலன்
சுரும்பினம்போலெனது கன்னிப்பருவமதைத்
தூரத்தினனர்கண்டபின் தூரவின்றுனேமானே (என)
எத்திசையுளோரேத்து மெழில்மயில்வீரனென்றே
இறுமாந்தென்சுற்றமதைத் துறந்தேனே
பத்திசெய்சுப்பராமன் பதத்துக்கருட்பெம்மானை
பதைக்கநான்கைக்கொண்டவப்பசப்புக்கள்ளி யேமாட்டி (என)

ருகூ, பதம்-இ-ம்-பியாகடை-ரூபகதாளம்.

பல்லவி,

எனக்காகிலுமவ-ளதிகசுந்தரமாக
இருக்கிறுளோசாமி

அநுபல்லவி.

உனைக்காணுமிமைப்போதோ ருகமாயிருக்கிறதே
ஒப்பிலாக்கழுக்குன்றி னுச்சியிலுகந்தோனே (எனக்)

சரணங்கள்.

கண்களிரண்டும்வண்டோ கனிவாயிதழ்கற்கண்டோ
கதலியடியோதுடை காமபீடமோவல்குல்
பெண்கட்கெல்லாமேட்டியாய் பேசுமவள்கிளிடியோ
பேடையன்மோவவளைப் பெருமையாயோதுகிறீர் (என)
தங்கக்குடமோகொங்கை தண்குமுதமோசெங்கை
தாளமோதந்தக்கோர்வை சந்த்ரனோமுகசேர்வை
துங்கவில்லோபுருவம் சொல்மங்கையோபருவம்
சொர்னச்சாயலோதிரேகம்சொகுசோவவள்சம்போகம் (என
கோகிலச்சுரம்பேசி கோடிதரங்ஙகவீசி
கொடியிடைதுடிமின்னல் குமரேசாவவளின்னல்
ஆகிலுஞ்சிலகால மானபின்புதெரியும்
அவள்செய்யுமோசமதிவ் வகிலமெல்லாமறியும் (என)

ருஎ-பதம்-இ-ம்-சௌராஷ்டிரம்- ஆதிதாளம்.

பல்லவி.

அதுவுஞ்சொல்லுவாளின்ன-மநேகமுஞ்சொல்லுவா
ளவள்மீதிற்குற்றமென்னடி.

அநுபல்லவி,

மதிதவழுஞ்சோலைசூழ் வேளூர்முத்துக்குமரர்
வயங்கும்பதத்தைக்கண்டால்சயங்கொள்வரோபுவிமேல் (அ)

சரணங்கள்.

கழுத்திற்கட்டுங்கரிய மணிக்குக்கடையானுட்கு
கனகரத்னமிழைத்த கண்டசரமுமாச்சே
பழுத்தவெற்றிலைக்கூறிற பதம்பாடியதும்போச்சே
பாங்கியர்க்கேவல்சொல்லும் பண்பிப்போவவட்காச்சே (அ)

எந்நேரமிங்குவந்து நகையென்றுந் துணியென்று
மிரவற்கேட்டநாள்போயிங் கெதிரிட்டுப்பேசவாச்சே
சன்னகாரையாடிய மேடையாச்சேவயது
சாய்ந்தவளுக்குக்குஜங் தங்கக்கிண்ணம்போலாச்சே (அ)

நயந்தெரியாதவட்கு நயநாகரீகமாச்சே
நாலுபேர்வரப்போக நாட்டங்களுமுண்டாச்சே
ஜெயங்கொண்டவடிவேலன் திருவருள்மிகவாச்சே
தினந்தினஞ்சுப்பராமன் செய்பதம்பாடலாச்சே (அ)

(*)

சுக, பதம்-இ-ம்-கானடா-ஆதிதாளம்.

பல்லவி.

அன்பனைத்தேடி-அழைத்துவாபோடி.

அநுபல்லவி.

பொன்போலிலகுமெந்தன் புந்திமிகவாடுதே (அன்)

சரணங்கள்.

பருவமதினுடி பக்ஷமுடன்கூடி
பொருவலின்பத்தைத்தந்த புண்யனெனும்வேலனும் (அன்)
கன்முதல்யாவுங் கரையுமேபாவம்
மன்மதன்செய்யுங்கோலம் மாதரசேயிக்காலம் (அன்)
ஒப்பொருவரில்லா னொளிர்தகைச்சொல்லான்
சுப்பராமனிசைக்கருள் சுடர்வடிவேலனும் (அன்)

0

சுஉ, பதம்-இராகம்-பியாகடை-தாளம்-மிஸ்ரம்.

பல்லவி.

அன்னமேயென்ன மாயமோதுரை
இன்னம்வரக்காணேனே

அநுபல்லவி.

வ்ன்னமயிலே வேலூர்முத்துக்குமார
மகிபன்றனைநீநாடி மானேயழைத்துவாடி - அன்

சரணங்கள்,

அந்தரங்கத்திலவர்க் கெனக்குங்குறை
யாருமலேயிருந் தாலும்
சொந்தம்விடாதடி கர்ப்பகாலத்தினில்
சூரியன்பார்பிரிந் தாலும்
சந்தடியாக வுகந்தமனிதர்கள்
கொந்தளிப்பார்நமக் கென்னடிவேதை
சொந்தநமக்கிங் கிருக்கநிந்தனையோ
தோகையேயொன்றுக்கு மஞ்சாமற்போய்வாடி - அன்
சொற்பனத்தினுமெனைமற வாதவா
சோதனைதான்செய்கி ருரோ
சற்பனைக்காரச்சக் காளத்திகள்செய்த
தாட்டோட்டத்திற்குள் ளானரோ
அற்பமனித ரவருறவாகாது
ஆயிரத்திலொருவர் நல்லவர்மானே
கற்பனைசொற்களைக் காதிற்கேட்கொண்ணுதே
கண்ணாளன்வந்தாற் பதினாயிரம்போடி - அன்
அன்புள்ளசாமி முகத்தில்விழித்தாலும்
அஞ்சுகமேவிழி போமோ
புன்முராங்காமப் புழுக்கச்சியைவேலன்
புல்லுவதுமழ காமோ
இன்பந்தருமெந்தன் கந்தசாமிதுனை
எங்கேயிருந்தாலு மென்மீதிஷ்டமுண்டு
நம்பினபேர்களைக் காக்குங்குணசீலன்
நாளுந்துதிசுப்ப ராமனுக்கனுகூலன் - அன்

௩௬, பதம்-இ-ம்-ஆதிதாளம்,

பல்லவி.

எட்டியிருந்துபேசும்-இனி
யெனதுறவையும்வீசும் சீமானே

அநுபல்லவி.

அட்டதிக்கும்புகழ் கதிர்வடிவேலா
அகிலமனைத்தும்பெற்ற வம்பிகைபாலா எட்ட

சரணங்கள்.

தொட்டாலென்னைத்திரு நீலகண்டமல்லவோ
தொடவேண்டாமினிதங்கள்நட்த்தையைச்சொல்லவோ
பட்டியெவளோவும்மைக் கெடுத்தாளென்னைவெல்லவோ
பாவியவளைக்கூடி யின்னமும்புல்லவோ எட்
சட்டத்தாய்ப்புநுகு சாந்தணிந்தாளோ
சரசவார்த்தைகளாடி விரகந்தந்தாளோ
பட்டம்பகல்போற் றேணநானுமக்காளோ
பாதகியாமவளை மருவியதோளோ எட்
குட்டிச்சுவரில்முட்ட வெள்ளெழுத்தாகுமோ
கொஞ்சுநீரோதோயென் குறையதீயேகுமோ
இட்டமவள்மீதிருக்க மனமதுநோகுமோ
இரவியுள்ளவனாக்கும் பேசவும்போகுமோ எட்

௫௪, பதம்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

பல்லவி,

இன்சொல்வினல்மிகுந்த வெழிற்சகியேநீயோடி
எந்தன்துரையைத்தேடிவா போடி

அநுபல்லவி.

அஞ்சலிசெய்புந்தொண்டர் நெஞ்சினிற்குடிகொண்டு
அருமலர்கமழ்திவ்ய திருமலையின்மேவிய
ஐயன்பன்னிரு கையன்மெய்யற்கு
மெய்யன்திகழ்நிலைஎள்ளினி லெண்ணெயைப்போலும்
கள்ளிரும்பூமணம்போலும் வள்ளிதெய்வானையுடன்
உள்ளமகிழமருவும் மங்கைலோலன்
சுங்கைபாலன் பொங்குசீலன்
செங்கைவேலனெனைப் பிரியாமலனுதினம்
அருமையறிந்ததுரை பிரிந்ததறிந்திடவே இன்

சரணங்கள்

அன்றுநான்திரண்ட யின்றுவரையப்படி
இருந்ததில்லையென்சாமி யெனைப்பிரிந்து
நின்றிடவேமாதர்கூது ஒன்றிரண்டாயோதினரோ
நிலைபெற்றிருந்தயின்ப நிலையும்விலைபெற்றரோ
நெஞ்சினிற்சஞ்சல மிஞ்சுதுயென்செய்வேன்
இந்தமாவேதனை அந்தமாய்ச்செய்தவர்
எப்படியோயிது வொப்பினளோ
ஆண்பாவிலே வீண்போகாதடி

பெண்ணரசேயினி	தன்னியரோமிகு
தன்னிடநன்மொழி	யுரைத்துத்தருணமென்று
அழைத்துவந்தருகினில்	விடுத்திடும்விரைகமழ்
அழகனுபுரிதிரு	வாண்டவிந்தைகள
வனிலதுபுகலுவன்	யானறிந்ததை
யினைவுடனெழில்கலை	நீக்கியெந்தனை
நிறுத்திமடிமிசை	யணைத்துயிருதனம்
பிடித்துயிதழதை	கடித்துரசமது
குடித்துவல்குலை	விரித்து
வெற்றிமுகத்தை	புயத்தையணைத்தொரு
முத்தமளித்து	அத்துடன்வந்த
இடங்கள்மிகுந்து	கலந்துஆலிங்கனஞ்செய்து
மிகுத்தானந்தமடைந்து	அணைத்து
அடாதுரையென்னை	விடாதேவிடாதேயென்
றுணையுமிட்டு	எந்த ஞணமும்விட்டு
பின்புநகர்ந்துநகர்ந்து	பிரண்டுபிரண்டு
மலரணைதுவண்டு	வண்டுமனமதுமகிழ்ந்து
என்றுகலவியைக்கடந்து	கமழ்பெரும்
காருலவுஞ்சென்னையெழி	லாறுமுகன்சொன்னதமிழ்க்
காம்போதிபதந்தனைப்பாடி	நான்பாடிசகஸ்திரகோடி
சரணஞ்சொல்லி	நொடிக்குள்ளேயோடி
தருணமிதுவேயென்று	அழைத்துவாபோடி-இன்

———:*═*:———

௬௫, பதம்-இ-ம்-பியாகடை-அடதாளம்.

பல்லவி.

ஏதுக்குக்கற்றதெல்லா-மோதுகிறீரிங்கே
யினியொன்றும்நடவாதுசாமி

அநுபல்லவி,

தாதலர்சோலைகள்சூழ்	வேதபுரிவாசரே	
சகமதனைத்துந்துதிக்குந்	தையலர்கணேசரே	ஏது

சரணங்கள்.

சின்னஞ்சிறுபிள்ளைகள்	செய்தமணற்சோறுபோலே	
சித்தெல்லாங்காட்டுகிறீ	ரடுக்குமோவொருக்காலே	
கன்னியரிருவர்க	ளிருக்கப்புவியின்மேலே	
கலங்காமற்றிரிகிறீர்	காமன்சரத்தினாலே	ஏது

உம்மைப்போற்பிரியவ ருலகிலொருவருண்டோ
ஒண்டொடியவளிடத் தென்னவுசிதங்கண்டோ
கொம்மைசேர்தனத்தினுள் கொடுத்தவிதழ்கற்கண்டோ
கோதையவளிருக்க நானுமக்கென்னதொண்டோ ஏது
பரவசமெனக்கன்று 'பாவித்ததைமறந்தீர்
பசப்பக்கள்ளிசெய்சூகாற் பட்சமெல்லாந்துறந்தீர்
பணாதருபாலனென்றே பாரனைத்துஞ்சிறந்தீர்
பத்தன்சுப்பராமனுக்குப் பதந்தரவேபிறந்தீர் ஏது

௬௬, பதம்-இ-ம்-பைரவி-அட்டதாளம்.

பல்லவி.

சற்றேசொல்லிவாடி-என்சுவாமிக்குமானேநீ
சற்றேசொல்லிவாடி

அநுபல்லவி.

உத்தமர்புகழுந்திருச் செந்தூரினித்தமும்வளர்
முத்தையனிடத்திலெந்தன் மோகமதைநீபோய்பெண்ணே-சற்

சரணங்கள்.

உற்றபாலனத்தையும் வெறுத்துத்தனித்துமலர்
மெத்தையிற்படுக்கிலென்கண் நித்திரைவருவதில்லை சற்
வண்டுநாணேற்றிக்கரும்பைக்கொண்டுவில்வளைத்துமதன்
சண்டைசெய்யவாரானதைக் கண்டுமனதேங்குதையோ சற்
சங்கதஞ்சுப்பராமன்சொல் செந்திலம்பதிவேலவன்
வந்தெனையணைவதற்கு வெந்தவிதமாகிலும்போய் சற்

==*====*==

௬௭, பதம்-இ-ம்-அடாணா-அட்டதாளம்.

பல்லவி.

கதவைத்திறந்துபேசடி அடியென்மானே
கதவைத்திறந்துபேசடி

அநுபல்லவி.

மதுமைப்பானஞ்செய்தோற்குமயக்கங்கொண்டதுபோலே
மனதுதடுமாறி யுனதுவீடுதேடி
வந்தாலுனக்குநான் சொந்தமல்லவடி - கத

சரணங்கள்.

மானேகலாப மயிலே-அன்னத்தின்பேடே
வயங்குங்கன்னக் கருங்குயிலே

நானேன்கார்த்திருப்பது நலமோவுனதுசித்தம்
நடுக்கமுடன்மனந் திடுக்கிடவேவந்தால்த்
தடுக்காதேயுன்னுடன் படுக்கவந்தேனடி (கத)
நிலவுமனல்போற் ருவுதே-கருங்குயிலும்
நிறுத்திநிறுத்தி கூவுதே
இலவுகாத்தகிள்ளைபோ லேங்கிமனம்வாடுது
எதிர்த்துமதப்பையல் பதைத்தேயிருக்கிற
விதத்தையறிந்தவென் துரைத்தனத்தின்கண்ணே (கத)
புகழுமகுடஞ் சூட்டுவேன்-எனதுதிரேகன்
பூரிக்கப்பணிகள் பூட்டுவேன்
மகிழும்படியுனக்கு மதனலீலைகாட்டுவேன்
மானேமதனது போதைதலைக்கேறி
வாதைமிகுத்தென்தன் காதையடைக்குது (கத)

—)§(*)§—

கூஅ, பதம்-இ-ம-காம்போதி-ரூபகதாளம்,

பல்லவி,

இந்தக்கிழவனுக்கு-யித்தனைசொகுசானல்
எவர்க்குச்சம்மதியாமோ

அநுபல்லவி.

விந்தைமகிழ்கழுக்குன்றின்தெய்வப்பெண்ணினல்லாட்கு
விந்தைக்கணவனெங்கள் வேதகிரியீசராம் (இ)

சரணங்கள்.

ஆருக்குத்துணையாவா னம்பலக்கூத்தனும்
பார்க்கப்பதங்குறமை பாம்புமெலும்புந்தோலும்
தீர்க்கமாய்க்கழுக்குன்றிற் றிருந்தும்விடையின்மீது
மார்க்கன்யோக்கியனென்றேசிலாக்கியமாய்ச்சொல்லவந்தாய் இ
ஆட்டைக்களவுசெய்து அம்பலத்தினின்றதுவும்
ஓட்டிவிரந்துண்ணதும் உலகமறியாதோ
நீட்டமாய்கழுக்குன்றில் ரிஷபவாகனமீது
தாட்டியாய்த்திரிகிற சங்கரிலோலனும் (இ)
கட்டுண்டுயமனுற்பின் காலாலுதைத்ததுவும்
வெட்டுண்டுதலைமீது விறகுசுமந்ததுவும்
பிட்டுவாணிச்சிக்காகப் பிரம்படிபட்டதுவும்
பட்டபாட்டையின்னஞ்சொல்லில்வெட்கமிகத்தோணுதே (இ

சுசு, பதம்-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்,

பல்லவி.

இனிமேலவ னென்னதந்தாலும்நா
னிணங்கமாட்டேனடி யக்கா

அநுபல்லவி.

கனமருவுஞ்சிகண்டிமலே முருகையன்வாழுமந்த
மெய்யான கோயின்முன்
முனிபோல்மேல்விழ முக்கிக்கொண்டேனொரு
முட்டுமுட்டவதில் மூட்டும்விட்டுப்போச்சு (இனி)

சரணங்கள்.

கோலேயிறுக்கிப்பிடித்தால்முன்காமங் கொதித்துவடியுமடி-விசை
கூடிமேற்கொண்டால்முன்னேரத்துக்கேகோழிகூவிவிடியுமடி
கேலிக்கிடமாகநேரம் பொறுத்துக்கிடக்கமுடியாதடி-அவர்
கிண்டினகிண்டதில்பண்டடின்மூக்குக் கிழிந்துமடியுமடி
தோலோமரமோ மரத்திற்றுளைத்ததுளேயோ
வளேயோதுறவோ உரலோகற்
சாலோதலேயெழுத்தின் வலியானேத்து
தத்துக்குத்தப்பிப் பிழைத்துவந்தேனடி (இனிமே)

மங்கையர்கொங்கையென்றுலவற்கு மகாலிங்கசமானமடி-அல்குல்
வாயிதழூறலருந்ததனத்தே னமிர்தபானமடி
பொங்கரவல்குலுக்குள்ளேவிரலிட்டல் பொங்கனுஷ்டானமடி-அநு
போகக்கரணமிதென்னேரமுமவர் புத்தியில்க்யானமடி
சங்கதிபோலினி யெங்குங்கிடையாது
சட்டையுள்ளமட்டும் போதுமவமானம்
பங்கத்தையென்சொல்வே னென்வீட்டில்ராத்திரிப்
பட்டபாடுநாலு பட்டாடைக்குண்டடி (இனி)

மட்டவிழ்வாசமலர்க்குழலாள்தெய்வ யானேக்கநுகூலர்-நீல
வர்னமயிலேறிநன்னயமாகப் பவனிவருஞ்சீலர்
சிட்டர்பரவவரந்தருமம்பிகை சிந்தைமகிழ்பாலர்-சொலுஞ்
செந்திருமேவியகுன்றக்குடியிற் செழிக்கும்வடிவேலர்
தொட்டுத்தழுவி யணைந்தசுகமிந்த
தொல்லுலகினுமிருப் பாரோடியந்த
கட்டழன்செய்த கோலத்தையென்சொல்வேன்
காசினிமேசுமப்ப ராமனுக்கருள்வோன் (இனி)

எய-பதம்-இ-ம்-கேதாரகௌளம்-ரூபகதாளம்

பல்லவி.

கலந்தாலல்லவோகலக்கமுண்டாகுங்
கட்டுறேனடிசகியே

அநு பல்லவி,

உலகம்பணியும் வேளூர்குமரேச
னுரிமையாயென் னிடத்தில்வந்தவனைக் (கல)

சரணங்கள்.

சுத்தமுள்ளபிராண சகியென்றிருந்தேன்
துரோகியென்றுதெரி யாமற்போச்சுதடி
எத்தனைநாளாக யோசித்திருந்தாயோ
எப்படிதுணி வேனோ
சித்தங்குளிர்ந்ததோ மானே
சித்தசன்கணைக்குள் ளானேன்
பத்தமில்லாதவ னென்றுயென்மனதில்
பட்டிருந்தால்முகம் பார்த்திடுவேனோடி (கல)

அடுத்தோரைக்கெடுக்குந் துர்ப்புத்தியுனக்கு
ஆர்சொல்லிக்கொடுத்தாரடி உன்னினத்தில்
அடிமடிதனில் கைவைத்துப்பாரடி
ஆவிபறக்கு தடி
படுக்கைவீட்டினிற் பிரியுமெனக்கந்த
பல்லிசொன்னபோதே தெரியும்
திடுக்கிட்டுதடியப்போதே யென்மனம்
தெருவினில்வந்து யிருவரைக்கண்டேன் (கல)

உள்ளநுங்கள்ளன்போ லிருந்துக்கொண்டு
உண்மைபோலெனக்கு நடந்து
ஓதுஞ்சுப்ப ராமனைக்காத்திடு
முமையருள்முரு கையன்
துள்ளாதடி மோசக்காரியெனது
துரையறிவானடி யுனதுசேதி
மெள்ளவவர்க்கென்மே லுற்றவெய்யமோக
வெறியினாலுன்னைநா னென்றுதொட்டனர் (கல)

—(*)—

எக, பதம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

மானேயுன்மீதிலிவர் - தானோவிரகங்கொண்டு
வந்ததுவேகோடிலட்சஞ் தந்ததல்லவோசொல்

அநுபல்லவி.

நானேசொல்கிறேனினி தேனேயின்பமாய்க்கேளு
நரபதிதனபதி ரம்யகுணசீலனடி
தேனொழுகும்வதன ஸ்ரீமுத்துச்செல்லேந்திரன்
சேதுபதியாம்பூமண்ட லாதிபதியானதுரை (மா)

சரணங்கள்.

கோடியுகங்கள்தபசு செய்யினுமவருடைய
குணம்போற்புருடர்க் குலகினில்வருமோ
மோடிசெய்யலாமோ வுனதுமனமகிழ்ந்து
தோடிராகம்பாடிச் சுகந்தந்தென்கண்ணே
மோடியவருக்கு வாய்க்குமாநீ
முன்புசெய்தபுண்யவசு மிந்தமன்னன்கிடைத்தாரடி
தேடிவருமின்னிடையார் கோடிதனினீயொருத்தி
சிந்தையில்முரண்டுசெய்தா லந்தநஷ்டமார்க்கடிபின் (மா)

உன்மனதின்படியே யநுபவிக்கத்தருணம்
ஒருவர்க்குங்கிடையாத துரைத்தனமாம்
செம்மைசேர்விலாசமதை ஜெகந்தனில்விரிக்கையில்
தர்மரிவர்போற் புருடர்தானேதடி
மன்மதச்சரச னிவனேயிசைந்தபடி
வங்கணம்புரியுமந்த ரங்கநாதனும்
ஜென்மபத்ரிகையிலுன்னை நன்மையோகசாலியென்று
செப்பியிருந்திடுஞ்சேதி யெப்படியலித்ததடி (மா)

தேசமெங்குமேபுகழு முகவைப்பதிவளருந்
திருவளரும்ப்ரசன்ன மோகாம்புஜன்
நேசமறவாதரவி குலந்தனில்வந்த
மாசுமறுகுற்ற மற்றவான்மதிகளும்
இராஜனைவர்வணங்கும் ஸ்ரீமுத்துச்செல்லேந்திரன்
ஞானசேதுபதி யானபாலலோலனும்
வாசமாமல்லிகார்ச்சுன பூசுரன்தமிழ்க்குதவும்
மங்களகல்யாணகுண துங்கமங்களங்கதுங்க (மா)

௭௨, பதம்-இ-ம்-அடாணா-தாளம்ரூபகம்

பல்லவி,

மானேயெந்தன்மீதிலவர்க்கென்னமோடி - அந்த
வம்பியென்னசொன்னளோநம்பியிருந்தேனே

அநுபல்லவி.

தேனுந்துஞ்சோலை திகழுந்திருத்தணிச்
செங்கல்வராயனுக் கிங்கிதமாமடீ (மானே

சரணங்கள்.

பந்தலேறிப்பத்துப் பணமிட்டவளைப்
பார்த்துக்கொண் டாரோ-அந்தப்
பாதகிபஞ்சாங்கத் தாலேயவனொன்ன
பலனைக்கண் டாரோ
சொந்தக்காரிபோலே துள்ளுவதால்மனஞ்
சொக்கியவள்பாலென் துரையுமிருப்பாரோ
தோதகத்தால்பல காரியமாகுமோ
சொம்பிற்கறந்தபா லுமூலக்கேறுமோ-மானே
சந்ததமுமலேத் தாலேமனமிகு
சலித்துநிற் பாரோ-துயர்
தருஞ்சிறுமைகண் டவருடன்வரும்
பெருமைகா ணாரோ
அந்திசந்தியெந்த வேளையிலாகிலு
மாவலாயென்னை யணையாதிருப்பாரோ
ஆனையேறிதிட்டி வாசல்நுழைவாரோ
ஆக்கப்பொறுத்தவ ராறப்பொறுக்காரோ-மானே
கொம்பனையாள்செய் துற்போதனையால்வருந்
கோபத்துக்கஞ்சுவ றாரோ-நாளுங்
கொல்லத்தெருவினில் விற்கும்ஊசிவிலை
கொடுத்துக்கொள்ளுவ தாரோ
உம்பர்மகிழும் விசித்திரக்கவிசொல்
சிதம்பரம்நீதி நெருங்கினராரோ
ஊருடன்கூடி வாழ்ந்துபகைப்பாரோ
ஊசிக்கண்ணாலேயா காசமும்பார்ப்பாரோ-மானே

௭௩, பதம்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி,

ஏனின்னமளக்குறீர்சாமி நீர்
எத்தியெத்தியென்னைமிகக்கற்றதெல்லாங் கொட்டிக்கொட்டி

அநுபல்லவி.

போனநாள்முதலாய்நீரும் நானுமிருந்தவொருமை
போலவாரிருந்தார்திருப் போரூர்வேலரோ
ஞானக்கிருபாகரரோ தோகைமயிலவாகனரோ
நன்றுநன்றுஉந்தனேச மின்றுதெரிந்தேன்விஸ்வாசம்-ஏனி

சரணங்கள்.

அண்டையிற்றிரண்டபெண்ணைக் கண்டிதுவரைக்குமவ
ளாசையால்வாழிருந்தீ ராகிலுமந்த

ஆசையறுபதுநாள் மோகமுப்பதுநாளென்
றுருஞ்சொல்லப்பாரி வின்னங்கேள்வியில்லையோ
கொண்டைமயிலோனே! யென்பாற்கண்டசுகம்போனினேந்துக்
கொண்டுரோவங்கேயிப் படிக்கூடலாகுமோ
அண்டினயிடஞ்சந்தேக மானதாலிங்ஙனம்வந்தி
ராட்டிப்படைத்தேவாவிப்சேட்டைசெய்கிறீரோபோம்போம்- ஏ

முன்னேஐந்துபின்னேஐந்து பந்தவிற்பதினைந்துமாய்
மூன்பணங்கொடுத்துமுன்னே மோசம்போனீரோ
மூடவன்கொம்புத்தேனுக்காசை யுற்றாப்போலவென்மேல்
மோகமாகுரீரக்காரியஞ் சரியாகுமோ
என்னசொந்தக்காரி யானாலும்பலவந்தமேசெய்ய
இருக்குதோநீதியதை யெண்ணியுளத்தி
வின்னதெனவறியாமல் நன்னயமாய்ப்பேசிப்பூமே
லேத்துகிறீரொன்னகண்டோ பாக்கியப்படுவதுண்டோ-ஏனி

தாசிகளுறவுபணக் காசுமேலிருப்பதென்றுஞ்
சங்கதிதெரிந்துஞ்சும்மா யிருக்கவந்தீர்
ஜாலசக்ரஸ்தாபித மிருப்பதாலெங்களுக்கென்ன
தாட்சிவேணபாக்கியங்கள் தானேயியுமோ
சூதனைதெரியாமல்வாய்ப் பூசியேயென்னோடுறவு
சொந்தங்கொண்டாடுரீரதைத் தூரவையும்
ஏசியேசியொன்றுமில்லை யென்றுங்கையைவிரிக்கிறீர்
இந்தக்கூழுக்காயிருபத்தெட்டு நாமம்போதும்போதும்-ஏனி

சந்தனக்குழம்பைவாரி பந்துமுலைமேலிறைத்துத்
தாளாதென்றுங்கையைத் தொட்டுத்தானிழுக்குறீர்
தரிக்குமண்ணைக்கயருய்த் திரித்துவானத்தைவில்ல
தாகவளைத்தேமயக்கி யேகப்பாற்குறீர்
எந்தவிதமுக்கரணம் போட்டாலுமுடியாதிப்போ
யெந்தனுடன்சொன்னதெல்லாங் கையின்மேல்வையும்
எந்தப்படிசெய்தாலு மெண்ணத்தின்படிநடக்கும்
என்றைக்குங்குழந்தைவேலன் வந்திக்கும்வடிவேலரோ-ஏனி

௭௪, பதம்-இ-ம்-அடாணு-ஆதிதாளம்-

பல்லவி.

இந்தமட்டுக்கும்வாரிக்-கட்டிக்கொண்டதுபோது
மேத்தலாங்கப்பலுக்குத்தானே

அநுபல்லவி.

வந்தவழியைப்பாருஞ் செங்கணிகைவேலரே
வரிசைப்பல்லக்கெனக்கிங் களித்தீர்முன்னாலே
மானியம்நட்டாத்தில் விட்டீர்பின்னாலே
நரிபிள்ளைக்குழிதனைச் சுற்றுவதுபோலே
நாடுகிறீர்பெண்டு ருசிகண்டுஉம்மாலே-இந்த

சரணங்கள்.

சொர்னமயமாச்சுது நீர்வந்தெந்தன்வீடு
சொல்லவேனுமோவதை யென்வெட்கக்கேடு
என்றுமெனக்கிந்த குடியானெனக்கீடு
எல்லாம்விடுத்துன்னப்ப னெடுத்தானேயோடு
ஒன்றுமறியீர்கபட நிசஞ்சென்மச்சூது
உனாக்கும்வெறுங்கைமுழம் போடவந்தீர்மாது
என்னகுட்டிக்கரணம் போட்டாலுநடவாது
இலைபொத்தலென்கிரீர் பந்தலில்நீச்குப்போது- இங்

நவரத்தினஞ்சுவரொங்கு மிழைத்துவந்தீர்முன்னம்
நடுவீடுமாத்திரங் தொண்டியாயிருக்குதின்னம்
அவிர்முருகானற்பச்சைக் கண்ணடிபோற்கிண்ணம்
அணிநிழலாடுது ஆறுலுமுன்னும்பின்னும்
தவிக்குரீர்செயிழை மேல்மையல்கொண்டு
தங்காதுவளாயினிற் கொழுத்திடினண்டு
செவிதனிலோதியின்ன மாளகிரீர்பெண்டு
செறுக்குரீர்வேலரோ துடைதட்டிக்கொண்டு- இங்

இலகுங்தங்கப்பணிகள் பூட்டிக்கொண்டேனே
என்குடியைக்கெடுக்கவங் திருககிரீரின்னந்தானே
மலைத்துக்கொண்டும்மையன்னை வார்த்தைகடுத்தேனே
வாய்க்கொழுப்புச்சிலையால் வடிந்ததெனக்குத்தானே
தலையைத்தடவவந்தீர் குளிர்ந்ததுகிரோகம்
தனிக்கெண்டைபோட்டுவி ராலிழுத்தீரனேகம்
பலுக்குரீர்குலுக்குரீர்பறக்கின்ற காக்கையின்வேசம்
பார்த்தாற்றெரியுந்தரு மமதுநிர்வாகம்- இங்

எ௫, பதம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

பல்லவி.

அதற்குள்ளேயேனிந்தப்பதட்டம்-கலந்தணைந்துமருவி
அனுபவிக்கலாம் பொறும்பொறும்-அதற்

அநுபல்லவி.

மதுமலர்த்தடஞ்சூழும் தணிகைமலைவாசரோ
மயில்வாகனகும ரோசரோ-அத

சரணங்கள்.

இடுவார்சொந்தமாயிருந்தால் முதற்பந்திகடைப்பந்தி
என்பதுண்டோ வேறொருவரைத்
தொடுவேனென்பதைத் தள்ளும்
உமக்குப்பரவசமாய்ச் சொன்னசொல்லுக்குரொண்டோ

கையை-விடுவிடு அவதூருக் கிடமாய்வந்துநேரும்
வெளியிதுவோசாமி எண்ணிப்பாரும்பாரும்
நெடுநேரமுமில்லை நிலாவெளிச்சம்வாங்கட்டும்
நெளிதகுப்புரளுங்கிழ நீலியுந்தூங்கட்டும்-அ

திருடனுந்தலையாரியுஞ் சேர்ந்தால்உலகத்தில்
தினங்கொள்ளை யடிக்கலாம்அதுபோல்
நாமிருவரும் இரகசியமாய்நடத்தும்
காரியத்தைஎவர்கள் கண்டுபிடிக்கலாம்
அது-தெரிந்துயெனக்குக்கண் சாடைசெய்கிறீர்சாமி
தேவர்க்குமுன்னமே நானுமதிகசாமி
உரிமையென்தங்கைமார் படுக்கைக்குப்போகட்டும்
உமதுமனதின்படி யின்றைக்கேயாகட்டும்-அ

ஏக்கங்கொண்டிருக்கிறீர் எனக்கில்லையோசாமி
இதற்கொண்ணமிடலமோ ஆகிலுமென்ன
ஆக்கப்பொறுத்தஉமக் காரப்பொறுக்கொணுதோ
அவசரப் படலாமோ
நீக்கமறநெருங்கும் கொங்கைவள்ளிலோலரே
நிமலையுதவுஞ்சுப்பிர மண்ணியவடிவேலரே
தூக்கம்வருமோமதன் போர்செய்யத்துடங்கட்டும்
சும்மாயிருஞ்சற்றே சந்தடியடங்கட்டும்-அ

எசு-பதம்-இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்.

பல்லவி.

எத்தைக்கண்டுநீ இச்சை கொண்டாய்மகளே
என்கண்ணேபெண்ணே நீஇப்போ-எத்தை

அநுபல்லவி.

சுத்தப்பயித்தியக்காதரன்கங்காரன் தோகையேமுன்னவன்
பேயுடனுடிய தொந்திக்கொ பழங்கந்தைக்கோ
ஏறும்நந்திக்கோ செய்யும்விந்தைக்கோநீ -எத்

சரணங்கள்,

புலியையுரித்துஆடையணிந்த போர்வைஆசைக்கோ
வலியக்காத்தில்மழுவையேந்தும் மனதுதுணிவுக்கோ
மலியின்பாம்பைபிடித்துக்கழுத்தில் மாட்டிக்கொண்டதை
பூட்டிக்கொண்டிட்ட மாலைக்கோ தரும்சேலைக்கோ
செய்யும்வேலைக்கோ காமலீலைக்கோநீ-எத்
மாமனும்மாமியும்ஒன்றுய்ச்செய்கின்றவரிசைப்பெருமைக்கோ
சோமனைசிரத்திலணிந்தவொருக்கண்துலங்கும்நெற்றிக்கோ
காமனைவென்றவராலத்தையுண்டு மார்க்கண்டனுக்காகவே
மன்றனையுதைத்தகாலுக்கோ சாம்பல் மேலுக்கோ

கணவாலுக்கோ கரிதோலுக்கோநீ(எத்)
மானைப்பிடித்துகரத்திலணிந்தவனத்தின்வேட்டைக்கோ
மீனைப்பிடித்துதரித்தவொருக்கண்விசறும்வேட்டைக்கோ
கானகத்தில்வேடனெச்சிலை கண்டுமுண்டவன்
கண்ணைப்பிடிங்கியகண்ணுக்கோ மாடுவொண்ணுக்கோ
சொந்தமண்ணுக்கோ ஜடை பெண்ணுக்கோநீ(எத்)

===(*)=(*)===

*எஎ, பதம்-இ-ம்-பந்துவராளி-அடதாளம்

பல்லவி.

நல்லவளைபோய் கைபிடித்தீர் ஆர்
சொல்லியுங்கேளாமல் சுயபுத்தியுமில்லாமல்

அநுபல்லவி,

கல்வியோதுந்தணி காசலவேலரோ
பல்லியோதிக்காடிப் பானையில்விழுந்தாற்போல் (நல்ல)

சரணங்கள்,

பெண்டுகளைக்கண்டபோ தெல்லாம்பழித்துச்சொன்ன
பேச்செல்லாம் பொய்யாச்சே-ஓடும்
பண்டியெல்லாம் ஓட்த்திலென்றிடுஞ்சொல்
பயனது மெய்யாச்சே-ஊரில்
தண்டுபிடாரியைப்போல் தெரியுமவள்சொரூபம்
தனைக்கண்டும்வெறுக்காமல் மனதில்விரகதாபம்
கொண்டீர்கொண்டாலுமென்னதொண்டாய் சாம்பிராணிதூபம்
கொடுக்கச்சொல்லியேவைப்பாள் உமக்குநற்சடகோபம்(நல்)

விதியால்ஜனப்பன்வீட்டுக் கோழிதனக்குத்தானே
விலங்குமாட்டிக்கொண்டாய் போலே-ஐயோ
பதறிநீர்சிக்கிக்கொண்டீர் அவள்ஜாலப்
பகட்டும்மோசம் தெரியாமலே-ஆரும்
மதிமயங்கவேயிந்த ஞானத்தையும்வில்லாய்
வளைத்துமண்ணைக்கயி றுக்குவாளவள்நல்ல
இதவாய்ஒருமாதந்தான் இருப்பாளோஉமக்குள்ளே
ஏன்மலைக்குறீர்போம்போம்தைத்தாச்சுதுமக்குக்குல்லா (நல்)

ஆடும்மயின்மிசைஏறியே இல்லாய்மெய்
அன்பர்கள்முன்வருந் துய்யனே-மலை
வேடனென்றுஞ்சொல்லி எனதென்றுவள்ளியை
விரும்பிமணந்த முருகையனே-என்றும்
மோடிசெய்யாமல்சன் மோகமாயுறவாடி
முத்துராமன்பதம்முழுதும் இசையாய்ப்பாடி
கூடும்பெண்களைத்தள்ளி கூசாமலொருகோடி
கும்பிடுபோட்டிந்த அம்புவியெல்லாந்தேடி(நல்ல)

*எஅ, இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி,

கைக்கிசைந்தபெண்ணைவிட்டு பக்கமெல்லாந்திரிந்தால்சரி
கட்டுமோபலன்கிட்டுமோ- ருசிதட்டுமோ-வெகுதிட்டமாச்சுது

அநுபல்லவி

சக்ரபாணிக்கிளையாள் தங்கையிற்குமர சண்முகசாமி
வலுநாமிசொந்தமாமிமகளாமிவளுந்தன் (கைக்கிசைந்த)

சரணங்கள்,

துங்கமுகம்சந்திரபிம்பம் துடைமதன்தோரணகம்பம்
கொங்கையொண்டும்சொர்னகும்பம் கோதையாள்ரதியின்பம்
எங்குந்திரிந்தோடுகிறீர் எதிர்பச்சையைநாடுகிறீர்
அங்கமோ அவள்தங்கமோ வெகுபொங்கமாகிய
வங்கணுளுந்தன் (கைக்கிசைந்த)
மைக்குழல்மஞ்செனத்தோணும் மங்கையினடைக்கலநாணும்
மிக்கனநூலிடைகாணும் விடுத்துச்சொல்லவோ வேணும்
கைக்குளவெண்ணைதானிருக்க நெய்க்கலைவார்போலிருக்க
வெக்குறீர்நீர் நக்குறீர்
அங்கேசிக்குறீர் நல்லபக்குவமாகிய(கைக்கிசைந்த)
கற்பகமெகுணசீலா கவிகுஞ்சரம்பணிவேலா
பொற்புயசுந்தரிபாலா புகழுங்குன்றைக்குடிவேலா
கைப்பழத்தைவிட்டு கதலிபழத்துக்காசைப்பட்டீர்
ஒப்புமோவென்சொல் தப்புமோவெகு
கற்புமோகரதிப்பெணுளுந்தன் (கைக்கிசைந்த)

*எகூ, இ-ம்-அடாணு,

பல்லவி.

உம்மைநான் அறிவேன் அறிவேன் அடாசாமி-அறிவேன்

அநுபல்லவி.

அரசர்பணியும் வேளூர்தனில்வாழும்
ஐயனேமெய்யனே பனனிருகையனே(உம்மை)

சரணங்கள்,

கடைக்கண்மூழியாமல் மிரட்டிமிரட்டி
கருணையான்போல் படித்துப்படித்து
கதைபடிக்கிற வகைத்தொழிலெல்லாம்தெரியும்
கடனுக்குநித்தங் கலந்தணைவாளோ
கருத்திலிருத்து மயங்காதேஎந்தன்
கந்தனேயவர்க் கனுகூலனேயுந்தன்
கருத்துஇருத்துஉறுத்துமெத்தநானறிவேன் அடசாமி (அ)
வேசிக்குங்காசுக்குந் தொந்தமல்லவோ

நீயென்னமக்குச் சொந்தமல்லவோ
வீணாசைகொண்டால் எனக்கென்னபலன்சாமி
நேசமாகசுப்பராமன் செந்தமிழ்பாடியே
என்னுடன்கூடியே முத்தையா
ஆசைவார்த்தைசொல்லி மோசஞ்செய்யாதடா
மன்னவர்முன்னேநீ சொன்னவிசேஷங்கள் (அ)

* அ௰, இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்,

பல்லவி.

என்னடிமெத்தஅளுக்குக்காட்டுறாய்-நான்அறிவேன்போடி
என்னடிமெத்தஅளுக்குக்காட்டுறாய்

அநுபல்லவி.

சொர்னமதில்சூழும் தணிகைமேவும்
சுப்பிரமண்ணியர்தன்மைதானும்
தோராவழக்கைப் பாராதோ-அவன்
சூதும் வாதும் நான் அறியேனோ (என்னடி)

சரணங்கள்,

உனக்குமவர் தனக்குநான் அஞ்சிபயங்க குடியா-என்னை
உருட்டிப்பார்த்து மிரட்டுறாயேண்டி நீபிடித்தது பிடியா
எனக்குவருதேபேச்சு-அடி-யேண்டிவிருதாவீச்சு
தனக்குச்சம் மதித்தபடி துள்ளட்டும்
சர்மாணியத்தை நிறுத்திக் கொள்ளட்டும (என்)
மனக்குள்ளே நினைக்கும்படி யாயிருக்குதே பாவி-செய்த
வகைமோசங்களை நினைத்தால் பதைக்குதேயென் னாவி
தினந்தினம்எண்டிமல்லு-அந்த-சிறிக்கியைப்பார்த்துச்சொல்லு-அ
மனங்களிக்கச்சந்தோஷமாய்ப் பார்க்கட்டும் [வர்
மாத்திரைவைத்தவன் தண்ணீரை வாராதோ (என்)
அடித்துயென்னைத் தேடித்திரிந்தகாலமுந்தப்பிப்
போச்சோ இப்போஆவல்கொண்டு
பேசுறாயேண்டி இன்னமஅதுவொருபேச்சோ
எடுக்கிறாயடி-சூது - நான் - இணங்குவேனோஇப்போது
அவர்-மடுத்தமாய்ச்சொன்னசொல்லுக்குஒண்டுண்டோ
தலைக்குமிஞ்சின ஆக்கினை தானுண்டோ (என்)

* அக, இ-ம்- வசந்தா-தாளம்-ஏகம்,

பல்லவி,

இவளைப்போல் கிடைக்குமோஎனக்கு-என்
ஆசைக்கிசைந்தகண் ணாளமகாராஜனடி (இவளைப்)

அநுபல்லவி.

தாரணியும்புகழ் வேளூர் முத்துக்குமாரசாமி
குணம்ஒன்றும்போதுமே பணமென்ன திரணம்பெண்ணே (இ)

சரணங்கள்.

எத்திக்குந்தித்திக்கும்புகழ் காமனுக்கெதிரேநீ
என்மனதுகோணுமல் நடக்கப்பட்டபிராணிநீ
சற்றுநேரங்காணுவிட்டால்தோணுதெல்லாம்- தோணும்பிணி
ஜீவாதாரம் அவருக்குகாமக்கடம் குறுணி(இவ)
அருமையா யென்னேவாவென்றழைப்பதும் போதுமே-என்
அரவிந்த முகத்தைப்பார்த் தாலும்பசி தீருமே
அறுபத்துநாலுலீலை செய்துவந்திந் நேரம்
ஹரிஹரி யென்னுனந்தம் சொன்னல் பாரமே(இவ)
பத்தன்சுப்பராமன்சொல்லும்-தமிழ்மே லதிமோகம்
புருஷர்வேசி யவர்கற்ற வித்தைகளுண் டனேகம்
நேத்திரவு நேத்தியாய் என்னுடன் செய்தசம் போகம்
நேருடையல் யென்னசொல்வேன்நினைத்தகாமப்பிரவாகம் (இ)

* அஉ, இ-ம்-கல்யாணி-தாளம்-ஏகம்,

பல்லவி,

ஐயனே உமையேநினைந்துநினைந்துருகிருள் (ஐயனே)

அநுபல்லவி,

மையல்கொண்டுந்தன்மீதில் ஐயாயெட்டுக்குடிவேல்
வையாபுரி அவள் ஐயாவரச்சொன்னுளவள் (ஐய)

சரணங்கள்.

அன்னநடையுமவள் மின்னல் கொடியிடையில்
சொர்னக்குயில்அவள் சொன்னமொழிதவருள்
மன்னுமருவவரச் சொன்னுள் சொகுசுக்காரி
என்னுளும்உன்மேல்பக்ஷம் நிர்ணயமாகச்சொன்னுள் (ஐய)
வாடா துரையேயெனக்கீடாவர்னக்கிளி
தாடாஉமக்குச்சரி ஜோடாயிருக்கிறவள்
கூடா மருவிவிளை யாட அணைந்துமுத்தம்
தாடா கட்டின்மீதில்விளை யாடவாடாசாமிநீ (ஐய)
பாலா வயதின்மீதில் பாலர்பருவமீது
லீலா வினேதஞ்செய்ய வேலா யினிமேல்மெத்த
தாளா தினிமேல்வாரும் வேலா அவளிடத்தில்
லோலா யெந்தனையிப்போ மேலா ரட்சிக்கவேணும் (ஐய)

சுப்பராமஐயர் பதம்.

முற்றுப்பெற்றது.

வாழி-விருத்தம்.

சீர்வளர்வேளூர்மேவுஞ் சேவலங்கொடியோன்வாழி
பார்திகழ்மறைகளாதி பநுவல்கள்வாழிவாழி
ஏர்பெறுமிதனையச்சி லியற்றியகண்பர்வாழி
நீர்மலிவேணியன்பால் நிலமெலாம்வாழிவாழி.